


ஆண்டறிக்கை

2018

ஹோமியோபதி மருத்துவ சபை

சுகாதார , போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

பொருளடக்கம்

		பக்கம்
1.	சுருக்கம்	02
2.	முகவுரை	03
3.	ஹோமியோபதி மருத்துவச் சபை	04
4.	பின்புல விபரங்கள்	05
5.	மருத்துவச் சபையின் நோக்கம்	07
6.	மருத்துவச் சபையின் அதிகாரங்கள்	08
7.	மருத்துவச் சபையின் அங்கத்தவர்கள் மற்றும் பதவிக்காலம்	10
8.	நிறுவனத்தின் தகவல்கள்	11
9.	மருத்துவச் சபையின் செயற்பாட்டுத்திட்டம் - 2018	12
10.	ஹோமியோபதி மருத்துவச் சபையின் செயலாற்றுகை	14
11.	வருடாந்த நிதி அறிக்கை	29
12.	கணக்காய்வு அறிக்கை	
13.	நல்வாழ்த்துக்கள்	

01. சுருக்கம்

மருத்துவ சபையின் நோக்கம் மற்றும் அமுல்படுத்தப்படும் சட்டங்கள் மற்றும் மரபுகள் என்பவற்றுக்கு அமைவாக வருடாந்த செயலாற்றுகை மதிப்பீடு செய்வதற்கான நோக்கத்துடன், ஹோமியோபதி மருத்துவ சபையின் 2018ஆம் ஆண்டறிக்கை இதனூடாக சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ்வருடத்தினுள் ஹோமியோபதி மருத்துவ சபையின் நடவடிக்கைகள் 2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க புதிய ஹோமியோபதி சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட முதலாவது நிர்வாக சபையான இடைக்கால மருத்துவ சபையின் உத்தியோகபூர்வ காலம் 19.10.2018 வரை தொடர்ந்ததுடன், இந்தக் காலம் வரை மருத்துவ சபையின் நடவடிக்கைகள் இந்தச் சபையினால் மேற்கொள்ளப்பட்டது. சபையின் நிதி நடவடிக்கைகள் சமாந்தர அமைச்சான சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் உள்ள சுதேச வைத்தியப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

அமைச்சின் ஊடாக சட்ட வரைபு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த 2016ஆம் ஆண்டு 10 இம் இலக்க ஹோமியோபதி சட்டத்தை அமுல்படுத்தவதற்கு அவசியமான சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் விதிகளை அங்கீகரிப்பதற்காக இந்த சபை அதிகாரத்தில் இருந்த 10 மாதங்களும் முயற்சியை மேற்கொண்டதுடன், ஹோர்மியோபதி வைத்திய முறையை நாடு முழுவதிலும் விரிவாக்குவதற்காகவும் நிலையாக கட்டியெழுப்புவதற்காகவும் மேலும் சில சட்ட வரைவுகளை வரைந்து அமைச்சுக்கு சமர்ப்பித்துள்ளது. அதன்படி, ஹோமியோபதி சட்டத்தை உருவாக்கும் போது ஹோமியோபதி இடைக்கால மருத்துவ சபையினை உருவாக்குவதற்கு எதிர்பார்த்த நோக்கத்தினை பூர்த்தி செய்வதற்கு இந்த சபை அதன் உத்தியோகபூர்வ காலம் முடிவடையும் வரை முடிந்தவரை செயற்பட்டது எனக் குறிப்பிட முடியும்.

ஹோமியோபதி மருத்துவ சபையை நாடு முழுவதிலும் விரிவாக்குவதற்கு தற்போது கொண்டு நடாத்தப்படும் சிகிச்சை நிலையங்கள் 7இற்கு மேலதிகமாக 7 புதிய சிகிச்சை நிலையங்களை ஆரம்பிப்பதற்கு முன்னோடியான சில பணிகள் இந்த வருடத்தினுள் பூர்த்தி செய்யப்பட்டது. புதிய சிகிச்சை நிலையங்களை ஆரம்பிப்பதற்கு அவசியமான பதவிகளுக்கான அனுமதி 2016ஆம் ஆண்டு கிடைக்கப் பெற்ற போதிலும், இந்த சிகிச்சை நிலையங்களை ஆரம்பிப்பதற்கு தடையாக அமைந்தது அரசுக்கு சொந்தமான கட்டிடத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் போனமையாகும். எனினும் இந்த வருடத்தினுள் 6 இடங்கள் அடையாளம் காணப்பட்டதுடன், அதில் 3 கட்டிடங்களைப் புதுப்பித்து, அந்த நிலையங்களை ஆரம்பிப்பதற்கான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. நாடு முழுவதிலும் கொண்டு நடாத்தப்பட்ட 7 அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையங்களின் ஊடாக சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை 81,089 ஆவதுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 6 மாவட்டங்களில் இந்த அதிகரிப்பு காணப்பட்டது. ஹோமியோபதி வைத்திய முறை பற்றிய சமூகத்தின் அறிவினை மேம்படுத்தும் 16 கருத்தரங்குகள், 16 நடமாடும் சிகிச்சை நிகழ்ச்சிகள், 27 தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், 17 வானொலி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதுடன் 44 கட்டுரைகள் சபையின் ஆலோசனையின் கீழ் வைத்தியர்களினால் பத்திரிகைக்கு வழங்கப்பட்டது. ஹோமியோபதி வைத்திய முறையை அபிருத்தி செய்யும் நோக்கத்துடன், மனித வளத்தை அபிவிருத்தி செய்வதற்காக ஹோமியோபதி வைத்திய சபையின் பிரதான பணியாக அமைவது தகைமை வாய்ந்த பதிவுசெய்த வைத்திய தொழில்புரிவோரின் எண்ணிக்கையை அதிகரிப்பதாகும். இந்த நோக்கத்தினைப் பூர்த்திசெய்வற்காக 8 ஹோமியோபதி பட்டதாரிகள் பதிவு செய்யப்பட்டதுடன், 2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் 30 (1)ஆம் பந்திக்கு அமைவாக, வைத்திய தொழில்புரிபவர்களை பதிவு செய்வதற்கான பரீட்சையை நடாத்துவதற்காக பரீட்சைக் குழு நியமிக்கப்பதற்காக, இந்தப் பணி சுகாதார, வைத்திய மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் பரீட்சை அலகிற்கு சாட்டப்பட்டது. ஹோமியோபதி மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக வைத்தியர்களுக்கு 33274.36 டொலர் பெறுமதியான அனுமதிப்பத்திரத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

02. முகவுரை

'சமனான ஒன்றால் சமனான ஒன்றை அழித்தல்' எனும் இயற்கையான நியதிக்கு அமைவாக கட்டியெழுப்பப்பட்ட மருத்துவ முறையாக ஹோமியோபதி மருத்துவ முறையினைக் குறிப்பிட முடியும். 18ஆம் நூற்றாண்டில் இந்த மருத்துவ முறையானது உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது மேற்கத்திய மருத்துவ நிபுணரான கிருஸ்டின் பெட்ரிக் சாமுவெல் ஹானிமான் என்பவராலாகும். இன்று விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இணைந்து வளர்ச்சியுறும் ஹோமியோபதி மருத்துவ முறை பொதுமக்கள் சுகாதார சேவையினுள் முக்கியத்துவம் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி, இந்திய அரசு ஹோமியோபதி மருத்துவ முறை தேசிய மருத்துவ சேவையுடன் இணைந்து, நாடு முழுவதிலும் அமைந்துள்ள ஹோமியோபதி சிகிச்சை நிலையங்கள் மற்றம் மருத்துவசாலைகள் மூலம் ஹோமியோபதி சிகிச்சையை மக்களுக்கு வழங்குவதோடு மட்டுமல்லாமல், ஹோமியோபதி மருத்துவ பட்டங்களை வழங்கும் பல்கலைக்கழகங்கள், ஹோமியோபதி மருந்துகளை தயாரிக்கும் கைத்தொழிற்சாலை மற்றும் ஹோமியோபதி ஆராய்ச்சி நிறுவனம் என்பவற்றை நிறுவுதல் என்பவற்றின் ஊடாக இந்த விடயம் மிகவும் தெளிவாக்கப்படுகின்றது.

1970ஆம் ஆண்டு 07ஆம் இலக்க ஹோமியோபதிச் சட்டத்தின் மூலம் முதன்முதலில் இலங்கை ஹோமியோபதி மருத்துவ சபை நிறுவப்பட்டதுடன், அது ஹோமியோபதி மருத்துவ முறையை இலங்கையினுள் நிறுவுதல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான பணிகளை மேற்கொண்டது. எனினும் அதில் எழுந்த சட்ட ரீதியான மற்றும் கட்டமைப்பு தடைகள் காரணமாக மருத்துவ சபை வீழ்ச்சியடைந்தது. எனினும், இந்த சவாலை எதிர்நோக்குவதற்காக பாராளுமன்றத்தினால் 2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க ஹோமியோபதி சட்டம் அங்கீகரிக்கப்பட்டது. இந்த புதிய சட்டத்தின் 1 ஆம் பிரிவின் 2ஆம் பந்திக்கு அமைவாக ஹோமியோபதி மருத்துவ சபையை மீண்டும் நிறுவுவதற்கான பணிகளை மேற்கொள்வதற்காக சட்டத்தின் 51ஆம் பந்திக்கு அமைவாக ஹோமியோபதி மருத்துவ சபையின் முதல் கட்டமாக ஹோமியோபதி இடைக்கால மருத்துவ சபையொன்று 2016ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கௌரவ அமைச்சரினால் நிறுவப்பட்ட ஹோமியோபதி இடைக்கால மருத்துவ சபையில் 04 ஹோமியோபதி மருத்துவர்களும் 06 அரச அலுவலர்களும் உள்ளடங்கியிருந்தனர். ஹோமியோபதி மருத்துவ சபையின் பதிவாளர், இந்த சபையின் செயலாளராவார்.

ஹோமியோபதி மருத்துவ சபையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அதன் பணிகளின் கீழ் கொண்டுவரப்பட்ட ஹோமியோபதி மருத்துவ முறையை பொது மக்கள் சுகாதார சேவையாக அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் 07 மாவட்டங்களில் 07 ஹோமியோபதி மருத்துவ சிகிச்சை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. அவை நிறுவப்பட்டுள்ள இடங்கள் தெகிவளை, பரகட்டுவ, மொனராகலை, பாலமுனை, மாத்தளை, குருநாகல் மற்றும் தொலங்கமுவ ஆகும்.

03.ஹோமியோபதி மருத்துவ சபை

தொலை நோக்கு

"ஹோமியோபதி மருத்துவ முறையினை தேசிய சுகாதார சேவை வரை மேம்படுத்துதல்"

செயற்பணி

"ஹோமியோபதி மருத்துவ முறைக்கான மனிதவள மற்றும் பௌதீக வளங்களை மேம்படுத்துவதற்கான உரிய கொள்கைகளை வகுத்து, அதனை பொது மக்கள் இடையே பரப்புதல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல்."

நோக்கம்

2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் ஏற்பாடுகளின் படி ஹோமியோபதி துறையின் தொழில் கல்வி மற்றும் சுகாதார சேவை என்பற்றின் தரத்தினை மேம்படுத்தல் மற்றும் அறிவு, திறன், அனுபவம் உள்ளவர்களின் ஊடாக நோயாளிகளின் ஆரோக்கியத்தை உருவாக்குதல் மற்றும் ஆரோக்கியமான நபர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல் என்பவற்றுக்கு தொழில் அதிகாரத்தை பயன்படுத்துவதன் மூலம் தொழிலின் கௌரவம் மற்றும் தரத்தினைப் பாதுகாத்தல்.

04. பின்புல விபரங்கள்

ஹோமியோபதி மருத்துவச் சபை நியதிச்சட்ட நிறுவனமாகும். முதல் மருத்துவ சபை ஹோமியோபதி இடைக்கால மருத்துவ சபையாக 2016ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க ஹோமியோபதிச் சட்டத்தின் ஊடாக பெயரியப்பட்டதுடன், அதன் அங்கத்தவர்களை நியமிக்கும் அதிகாரம் கௌரவ அமைச்சருக்கு சாட்டப்பட்டுள்ளது. அதைத்தொடர்ந்து, உத்தியோகபூர்வ அரச அலுவலர்கள் மூவர், ஹோமியோபதி மருத்துவ தொழில்புரிபவர்களிடையே தேர்தல் வைக்கப்பட்டு அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐவர், ஹோமியோபதி மருத்துவர் இருவர் கட்டாயமாக உள்ளடங்கும் வகையில் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மூவரையும் உள்ளடக்கி 11 நபர்கள் அடங்கிய சபையொன்று அமைக்கப்படும். சட்டத்தின் கொள்கை மற்றும் ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்கான அதிகாரம் கௌரவ அமைச்சரிடம் உள்ளதுடன், உரிய துறை தொடர்பாக சட்டத்திற்கு அமைவாக ஒழுங்குவிதிகளைத் தயாரிக்கும் அதிகாரம் சபைக்கு சாட்டப்பட்டுள்ளது.

சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள்

2016ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க ஹோமியோபதிச் சட்டத்தை அமுல்படுத்தும் திகதியில் அமுலிலிருந்த அனைத்து கட்டளைகளும், இந்தச் சட்டத்தின் கட்டளைகள் தயாரிக்கும் வரை, இந்த சட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கட்டளைகள் எனக் கருத்துப்படும். புதிய சட்டத்தின் கீழ் அவசியமாக ஒழுங்குவிதிகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றதனால், 1970ஆம் ஆண்டு 07ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் கீழ் செயற்பட்ட அனைத்து கட்டளைகளும் அவ்வாறே செயற்படுத்தப்படும்.

1970ஆம் ஆண்டு 07ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்திற்கு அமைவாக வெளியிடப்பட்ட கட்டளைகள்

1. ஹோமியோபதி ஒழுங்குவிதிகள் - 1980
(மருத்துவதுறையைச் சேர்ந்தவர்களை பதிவுசெய்வதற்கான ஒழுங்குவிதிகள் மற்றும் ஹோமியோபதி மருந்து இறக்குமதி)
2. ஹோமியோபதி மருத்துவ சபையின் சட்டம் - 1981
3. ஹோமியோபதி மருத்துவ சபையின் தேர்தல் ஒழுங்குவிதிகள் - 1998

ஹோமியோபதி மருத்துவ சபையை நிறுவுதல்

இந்த நாட்டில் முதன் முதலில் ஹோமியோபதி மருத்துவ சபை, 1970ஆம் ஆண்டு 07ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்திற்கு அமைவாக, 1979ஆம் ஆண்டு விடயத்திற்கு பொறுப்பாக இருந்த அமைச்சரினால் நிறுவப்பட்டது. 5 வருடங்களுக்கு ஒருமுறை மருத்துவ தொழில்புரிபவர்களுக்கிடையில் தேர்தல் வைக்கப்பட்டு (முதலாவது மருத்துவ சபை தவிர்ந்த) நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், தொடர்ந்தும் மருத்துவ சபை நியமிக்கப்படவில்லை. 1979ஆம் ஆண்டிற்கு பின்னர் இரண்டாவது மருத்துவ சபை 1998ஆம் ஆண்டும் மூன்றாவது மருத்துவ சபை 2006ஆம் ஆண்டும் நியமிக்கப்பட்டதுடன், அதன் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் மூன்றாவதாக நியமிக்கப்பட்ட மருத்துவ சபை 2009ஆம் ஆண்டு அதன் காலம் முடிவடைவதற்கு முன்னர் கலைக்கப்பட்டு அடுத்த இரு வருடங்களுக்கு புதிய சபை நிறுவப்பட்டது.

அதன் உத்தியோகபூர்வ காலம் 2011 ஜனவரி 30ஆம் திகதி முடிவடைந்தது. அதுவரை காணப்பட்ட ஹோமியோபதி சட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்கி புதிய சட்டம் கொண்டுவரும் வரை மருத்துவ சபையின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழ் கௌரவ அமைச்சர் அல்லது அமைச்சின் செயலாளரினால் ஹோமியோபதி இடைக்கால நிர்வாக சபை நிறுவப்பட்டது. 2011 ஜூன் 16ஆம் ஆண்டிலிருந்து 2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க புதிய ஹோமியொபதி சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட 2016 ஜூலை 29ஆம் திகதி வரை ஹோமியோபதி மருத்துவ சபையின் நடவடிக்கைகள் இடைக்கால நிர்வாக சபையினால் நிறுவப்பட்டது. இவ்வாறு நியமிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபையில் 05 அங்கத்தவர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தனர். இந்தக்காலம் முழுவதிலும் ஹோமியோபதி மருத்துவர்களின் தொழில்நுட்பக் குழுவின் ஆதாரவு ஹோமியோபதி இடைக்கால நிர்வாகக் குழுவிற்கு வழங்கப்பட்டது.

ஹோமியோபதி இடைக்கால சபை

2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க ஹோமியொபதி சட்டம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், 2016 ஒக்டோபர் 21ஆம் திகதி சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரினால் சட்டத்தின் மூலம் அவருக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் ஊடாக ஹோமியோபதி இடைக்கால நிர்வாக சபை நிறுவப்பட்டது. சட்டத்திற்கு அமைவாக முதலில் நிறுவப்பட்டது ஹோமியோபதி இடைக்கால சபையாகும். இதன் உத்தியோகபூர்வ காலம் இரண்டு வருடங்களாகும். சட்டத்தை அமுல்படுத்துவதற்கு அவசியமான கட்டளைகளை தயாரிப்பதற்கு அவசியமான ஆரம்ப வரைவுகளை தயாரித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் இந்த சபையின் முதற்பணியாக கருதப்படுகின்றது.

05. மருத்துவ சபையின் நோக்கம்

2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்திற்கு அமைவாக ஹோமியொபதி மருத்துவ சபையின் நோக்கங்கள் கீழ்வருமாறு அமையும்.

(அ) ஹோமியோபதி மருத்துவத் தொழிலில் ஈடுபடுவதை ஊக்குவித்தல், அபிவிருத்தி செய்தல், ஒழுங்குமுறைப்படுத்தல்;

(ஆ) ஹோமியோபதி மருத்துவமுறைக்கு அமைவாக பொது மக்கள் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் சமூகத்தினுள் ஹோமியோபதி வைத்தியமுறையை ஊக்குவித்தல்;

(இ) ஹோமியோபதி மருத்துவமுறையை கற்கைசெய்தல், ஆராய்ச்சி செய்தல் மற்றும் ஹோமியோபதி மருத்துவத் தொழிலில் ஈடுபடுதல், அதனை மேம்படுத்துதல் மற்றும்;

(ஈ) ஹோமியோபதி நிறுவனத்தை நிறுவி கொண்டு நடாத்துதல்;

(உ) அரச ஹோமியோபதி மருத்துவசாலைகள் தவிர்ந்த ஹோமியோபதி மருத்துவமுறைக்கு அமைவாக சிகிச்சைகளை வழங்கும் நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்;

(ஊ) ஹோமியோபதி மருந்து வகைகள், ஔடதங்கள் மற்றும் ஏனையவற்றைத் தயாரித்தல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் விநியோகித்தலை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்.

06. மருத்துவ சபையின் அதிகாரங்கள்

சட்டத்தின் 16ஆம் பந்திக்கு அமைவாக கீழ்வரும் அதிகாரங்கள் ஹோமியோபதி மருத்துவ சபைக்குரியது ஆகும்.

01) ஹோமியோபதி மருத்துவத் தொழில்புரிபவர்கள், ஹோமியோதி மருந்து கலப்பவர்கள், ஹோமியோபதி தாதிகள் மற்றும் ஹோமியோபதி நிறுவனங்களை பதிவுசெய்தல்;

02) ஹோமியோபதி மருத்துவ தொழில்புரிபவர்கள் பெற்றிருக்கும் கல்வித்தகைமைகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல்;

03) ஹோமியோபதி மருத்துவ தொழில்புரிபவர்களுக்கு தகைமைகளை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து அது பற்றிய சான்றிதழை உறுதிப்படுத்திக்கொள்ளல்;

04) ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி அல்லது நிறுவனத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு பரீட்சையாளர்களை நியமித்தல்;

05) ஹோமியோபதி மருத்துவ முறைக்கு அமைவாக சிகிச்சை சேவைகளை வழங்குதல்;

06) ஹோமியோபதி நிறுவனத்தை நிறுவுதல், கொண்டு நடாத்துதல் மற்றும் பட்டதாரி கற்கை பாடநெறிகளைத் தயாரித்தல் ;

07) ஹோமியோபதி மருந்து ஏற்றுமதி மற்றும் இறக்குமதி;

08) ஹோமியோபதி மருந்தினை விஞ்ஞான ரீதியாக தயாரித்தல் மற்றும் ஊக்குவித்தல்;

09) ஹோமியோபதி மருத்துவ வசதிகள், உபகரணங்கள், பாடநெறி மற்றும் பரீட்சைகள் தொடர்பாக குறைந்தபட்ச தரத்தினை குறித்துரைத்தல் மற்றும் பேணுதல்;

10) ஹோமியோபதி விடயங்களைக் கற்கும் மாணவர்களுக்கு ஏனைய வசதிகளை வழங்குதல், ஹோமியோபதி ஆராய்ச்சி நிறுவனத்தை மேம்படுத்தல், அவசிய நிறுவனம் மற்றும் நபர்களுக்கு நிதி உதவிகள் அல்லது வேறு உதவிகளை வழங்குதல்;

11) பட்டப்பின் படிப்பு ஹோமியோபதி மருத்துவ கல்வி தொடர்பாக மருத்துவ கல்விக்கு குறைந்தபட்ச தரத்தினை விதித்தல் மற்றும் பேணுதல்;

12) ஹோமியோபதி மருத்துவ முறைக்கு ஏற்றவகையில் பொது மக்கள் சேவையை மேம்படுத்தல்;

13) மருத்துவ கல்வி தொடர்பான பட்டம் மற்றும் ஏனைய கல்விகளை வழங்குதல் தொடர்பாக உயர் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து பணிபுரிதல்;

14) 1978ஆம் ஆண்டு 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்திற்கு அமைவாக ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியை நிறுவுவது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்;

15) சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான குழுக்களை அமைச்சரவை அனுமதியுடன் நிறுவுதல்;

16) அலுவலர்களுக்கு அல்லது குழுக்களுக்கு அதிகாரங்களை வழங்குதல்;

17) சபையின் அதிகாரங்கள். பணிகள் மற்றும் செயல்களை மேற்கொள்ளுதல் மற்றும் நிறைவேற்றுவதற்கு ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல்;

18) சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் நிறைவேற்றுதல்.

07. மருத்துவ சபையின் அங்கத்தவர்கள் மற்றும் பதவிக்காலம்

2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்திற்கு அமைவாக மருத்துவ சபையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை தலைவர் உள்ளடங்களாக 11 ஆகும். உத்தியோபூர்வமாக நியமிக்கப்பட்ட அமைச்சின் சிரேஸ்ட அலுவலர், திறைசேரி அலுவலர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதிநிதி உள்ளடங்கலாக மூன்று அரச அலுவலர்களும், ஹோமியோபதி மருத்துவ தொழில்புரிபவர்களுக்கிடையில் தேர்தல் நடாத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து நபர்கள் கட்டாயமாக உள்ளடங்கும் வகையிலும், கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மூன்ற நபர்களையும் உள்ளடக்கி 11 அங்கத்தவர்கள் நியமிக்கப்படுவர். மருத்துவ சபையின் செயலாளர் / பதிவாளர் கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்துடன் சபையினால் நியமிக்கப்படுவார். சபை மூன்று வருடங்களுக்கு நியமிக்கப்படுவதுடன், பதிவாளர் ஐந்து வருடங்களுக்கு நியமிக்கப்படுவார்.

08. நிறுவனத்தின் தகவல்கள்

நிறுவனத்தின் பெயர் : ஹோமியோபதி மருத்துவ சபை

முகவரி : இலக்கம் 94, ஷெல்டன் ஜயசிங்க மாவத்தை, வெலிசறை, இராகம

தொலை பேசி இலக்கம்: 011 2958175

தொலைநகல்: 011 2958175

மின்னஞ்சல்: homosri.mcouncil@gmail.com

கூட்டிணைக்கப்பட்ட நிறுவனத்தின் நிலை: 2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்கச் சட்டத்தின் 15,16 மற்றும் 17ஆம் பிரிவுகளுக்கு அமைவாக நோக்கம் மற்றும் இலக்கு என்பவற்றுடன் ஹோமியோபதி மருத்துவ சபை நிறுவப்பட்டுள்ளது.

நிர்வாகக் கட்டமைப்பு :

செயலாளர்/ பதிவாளர்

பணிக்குப் பொறுப்பான மருத்துவர்கள்

முகாமைத்துவ உதவியாளர்கள்

மருந்து கலப்பவர்கள்

அலுவலக உதவியாளர்கள்

வங்கி : இலங்கை வங்கி – தப்ரபோன் கிளை, கொழும்பு 01.

கொமர்ஷல் வங்கி – ஜா-எல கிளை

09. மருத்துவ சபையின் செயற்பாட்டுத் திட்டம் - 2018

இலக்கு இலக்கம் 01

2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்தல்.

உபாயமார்க்கம்

சட்ட ஒழுங்குகள் மற்றும் ஒழுங்குவிதிகளை வெளியிடுதல்.

இலக்கு இலக்கம் 02

01. சட்டத்தின் இலக்கம் 30/1 இன் ஏற்பாடுகளின் கீழ் மருத்துவர்களை பதிவுசெய்தல்.

02. ஹோதியோபதி சுகாதார சிகிச்சை சேவைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு அவசியமான துணை சுகாதார சேவையாளர்களை பயிற்றுவித்தல்.

03. தொழிலை அங்கீகரித்தல் மற்றும் பதிவுசெய்தல்.

உபாயமார்க்கம்

- விண்ணப்பங்களைக் கோருதல்
- பரீட்சைகள் குழுவை நியமித்தல்
- பரீட்சைகளை நடாத்துதல்.
- பரீட்சையில் சித்தியடைந்தவர்களை பதிவுசெய்தல்.
- துணை சுகாதார ஊழியர்களை பயிற்றுவித்தல்
- தொழிலை அங்கீகரித்தல் மற்றும் பதிவுசெய்தல்.

இலக்கு இலக்கம் 03

சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஹோமியோபதி சுகாதார சேவைகளை வழங்கும் நிறுவனங்களை பதிவுசெய்தல்.

உபாயமார்க்கம்

சட்ட ஒழுங்குகள் மற்றும் மூலப்பிரமாணத்தைத் தயாரித்தல்

இலக்கு இலக்கம் 04

சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஹோமியோபதி மருந்துகளை இறக்குமதி செய்தல் மற்றும் மருத்துவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்தல்.

உபாயமார்க்கம்

- தேவைகளை அடையாளம் காணுதல்
- வழங்குனர்களை தேர்ந்தெடுத்தல்.
- விலைக்கேள்விகளைக் கோருதல்
- இறக்குமதி செய்தல்.

இலக்கு இலக்கம் 05
சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அரச ஹோமியோபதி சிகிச்சைகளை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல்.

உபாயமார்க்கம்

- ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல்.
- சம்பளக் கொடுப்பனவு மற்றும் ஊழியர் எண்ணிக்கைக்கான அனுமதியைப் பெற்றுகொள்ளுதல்.
- செயலாற்றுகை
- அறிவு மற்றும் திறனை ஊக்குவித்தல்
- புதிய சிகிச்சை நிலையங்களை ஆரம்பித்தல் மற்றும் சேவையை பரவலாக்கல்.

இலக்கு இலக்கம் 05
சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அரச ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கு அவசியமான ஒழுங்குவிதிகளை வெளியிடுதல்.

உபாயமார்க்கம்

- தேவையைக் கண்டறிதல் மற்றும் தேசிய கொள்கைளைத் தீர்மானித்தல்.
- வெளிநாட்டு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிகளில் கற்கைசெய்தல்.
- பல்கலைக்கழக ஆணைக்குழுவின் மூலப்பிரமாணங்கள் மற்றும் நிபந்தனைகளை அடையாளம் காணுதல்.
- உயர் கல்வி அமைச்சரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்.
- ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல்.
- அங்கீகரித்தல் மற்றும் வெளியிடுதல்.

10. ஹோமியோபதி மருத்துவ சபையின் செயற்பாடுகள்

தொலை நோக்கு

"ஹோமியோபதி மருத்துவ முறையினை தேசிய சுகாதார சேவை வரை மேம்படுத்துதல்"

செயற்பணி

"ஹோமியோபதி மருத்துவ முறைக்கான மனிதவள மற்றும் பௌதீக வளங்களை மேம்படுத்துவதற்கான உரிய கொள்கைகளை வகுத்து, அதனை பொது மக்கள் இடையே பரப்புதல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல்."


01. அரச ஹோமியோபதி சிகிச்சையிலையங்களின் செயலாற்றுகை மற்றும் முகாமைத்துவம்

1.1. அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையங்களின் செயலாற்றுகை.

இவ்வருடம் அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையங்கள் 07இற்கு வருகை தந்த நோயாளிகளின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டள்ளது.

சிகிச்சை நிலையத்தின் பெயர்	வருகை தந்த நோயாளிகளின் எண்ணிக்கை
தெகிவளை	16,447
பரகடுவ	13,732
மாத்தளை	10,533
பாலமுனை	8,182
குருநாகல்	11,349
மொனராகலை	4,768
தொலங்கமுவ	16,078
மொத்தம்	**81,089**

2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு ஹொமியோபதி மருத்துவ சபையினால் கொண்டு நடாத்தப்படும் அரச சிகிச்சை நிலையங்களுக்கு வருகை தந்த நோயாளிகளின் எண்ணிக்கை



2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு ஹொமியோபதி மருத்துவ சபையினால் கொண்டு நடாத்தப்படும் அரச சிகிச்சை நிலையங்களுக்கு வருகை தந்த நோயாளிகளின் எண்ணிக்கை 6 மாவட்டங்களில் அதிகரித்திருக்கும் விதத்தை மேற்குறிப்பிட்ட வரைபு காட்டுகின்றது.

1.2. அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையங்களின் முகாமைத்துவம்

ஹோமியோபதி மருத்துவ முறையை பொது மக்களுக்கான சுகாதார சேவையாக ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு கொண்டு நடாத்தப்படும் ஹோமியோபதி சிகிச்சை நிலையங்களுக்கு வருகை தரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து, நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் நிறுவன முறைமையாக வளர்ந்துள்ளது. இவ் வருடத்தினுள் மேற்குறிப்பிட்ட சிகிச்சை முகாமைத்துவத்திற்கு வசதிகளை வழங்குவதற்கு மருத்துவ சபை நடவடிக்கைகளை எடுத்தது. அதன் கீழ், பணியாட்குழுவின் பராமரிப்பு, மருந்துகளை வழங்கல், சிகிச்சை நிலையங்களுக்கான உபகரணங்களை வழங்குதல், சிகிச்சை நிலையங்களுக்கு நீர் மின்சாரம் மற்றும் துப்பரவு சேவைகளை வழங்கல் என்பன மேற்கொள்ளப்பட்டது.

02. ஹோமியோபதி நடமாடும் சிகிச்சை சேவைகள்

2.1. ஹோமியோபதி மருத்துவச் சபை ஹோமியோபதி வைத்தியசாலையுடன் இணைந்து ஒழுங்குசெய்த நடமாடும் சிகிச்சை முகாம்கள்.

ஹோமியோபதி மருத்துவ முறையை பொது மக்களிடையே பிரபல்யப்படுத்தும் நோக்கத்துடன், ஹோமியோபதி மருத்துவ சபையினால், நடமாடும் சிகிச்சை முகாம்கள் நடாத்தப்படுவதுடன், இதில் வெலிசர ஹோமியோபதி வைத்தியசாலையுடன் இணைந்து ஒழுங்கு செய்தல் இதில் ஒரு முறையாகும்.

	சிகிச்சை முகாம்கள் நடாத்தப்பட்ட இடங்கள்	பெண்கள்	ஆண்கள்	மொத்தம்
2018.01.21	ரொட்டிகோ எட்மன்ட் பீரிஸ் வித்தியாலயம், சிலாபம்	**79**	**19**	**98**
2018.02.18	ரொட்டிகோ எட்மன்ட் பீரிஸ் வித்தியாலயம், சிலாபம்	**103**	**33**	**136**
2018.03.11	ரொட்டிகோ எட்மன்ட் பீரிஸ் வித்தியாலயம், சிலாபம்	**112**	**28**	**140**
2018.03.24	ஸ்ரீ சித்தார்தராம விகாரை, பாணந்துறை	**39**	**19**	**58**
2018.05.12	மஜ்ஜிட் பசல் பள்ளி, பெரிய முல்ல, நீர்கொழும்பு	**33**	**21**	**54**
2018.06.12	நடமாடும் பொலிஸ் காவலரண், குரவலான	**30**	**16**	**46**

2.2. அரசின் ஹோமியோபதி சிகிச்சை நிலையங்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்கு மற்றும் நடமாடும் முகாம்கள்.

ஹோமியோபதி மருத்துவ சபையினால் கொண்டு நடாத்தப்படும் அரச ஹோமியோபதி நிலையங்களினாலும் ஹோமியோபதி மருத்துவ முறையினை மக்களிடையே பிரபல்யப்படுத்தும் நோக்கத்துடன், நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தது. அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சியளித்தல் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் நடமாடும் முகாம்கள் என்பன இதற்குரிய நிகழ்ச்சிகள் ஆகும்.



2.2.1. தெஹிவளை அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையத்தின் ஊடாக நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகள்.

I. தெகிவளை-கல்கிஸ்ஸ சமூக வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டத்துடன் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்			
இடம்	கருத்தரங்கு	நடமாடும் முகாமை	பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை
கொத்தலாவல புர பாடசாலை	1	1	87
நாதிமால கலே பாடசாலை	1	1	85
நாதிமால தர்மராஜ விகாரை	1	1	78
இரத்மலான தரமராம வித்தியாலய	1	1	132
இரத்மலான சதகம் விகாரை	1	1	118
மொத்தம்	5	5	500

II. "சுவ யாத்ரா" சமூக சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகள்			
இடம்	கருத்தரங்கு	நடமாடும் முகாமை	பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை
ஹசலக சுகதராமய	1	1	139
அம்பன்கொல்ல ஸ்ரீ சுதர்மராம விகாரை	2	2	268
அல்பிட்டி ஜயபிம சேனாசன விகாரை	1	1	114
அல்பிட்டிய ஸ்ரீ விஜயராம விகாரை	1	1	138
மொத்தம்	5	5	659

2.2.2 தொலங்கமுவ அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையத்தின் ஊடாக நடாத்தப்பட்ட வெளிவாரி நிகழ்ச்சித்திட்டம்


இடம்	கருத்தரங்கு	நடமாடும் முகாமை	பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை
தொல்கமுவ விகாரஸ்தானய	2	2	242

2.2.3 பரகடுவ அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையத்தின் ஊடாக நடாத்தப்பட்ட வெளிவாரி நிகழ்ச்சித்திட்டங்கள்

இடம்	கருத்தரங்கு	நடமாடும் முகாமை	பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை
கிரியல்ல ஸ்ரீ சரணாராம விகாரை	2	1	161
தெஹெரகொட எல்லாவல பூரண விகாரஸ்தானய	1	1	72
மாதுகல ஸ்ரீ ரத்னராமய விகாரஸ்தானய	1	1	96
மொத்தம்	4	3	329

2.2.4 மொனராகல அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையத்தின் ஊடாக நடாத்தப்பட்ட வெளிவாரி நிகழ்ச்சித்திட்டம்

இடம்	கருத்தரங்கு	நடமாடும் முகாமை	பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை
என்டர்பிறைஸ் ஸ்ரீலங்கா கண்காட்சி பூமி		1	161



அதன்படி ஹோமியோபதி மருத்துவச் சபையின் வழிகாட்டலின் கீழ் ஹோமியோபதி மருத்துவ முறையை பொதுமக்களிடையே பிரபல்யப்படுத்தவதற்காக நடாத்தப்பட்ட கருத்தரங்குகளின் எண்ணிக்கை 16 மற்றும் நடமாடும் சிகிச்சை முகாம்கள் 16 ஆகும்.

03. ஹோமியோபதி மருத்துவ முறை பற்றிய ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள்.

தெகிவளை சிகிச்சை நிலைய பணிப்பொறுப்பு வைத்திய அலுவலர் டாக்டர்.திருமதி.அனுஷா ஹேமகுமாரவினால் இந்த வருடத்தினுள் 17 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் 17 வானொலி நிகழ்ச்சிகளும் பொது மக்களுக்கு ஹோமியோபதி மருத்துவ முறை பற்றி அறிவூட்டப்பட்டது. அத்துடன், இவ்வருடத்தினுள் அவரினால் பத்திரிகைக்கு 44 கட்டுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

01. சியத டீவி – நேரடி ஒளிபரப்பு

- *2018.01.19 - எலும்புத்தேய்வு நோய் தொடர்பான ஹோமியோபதி கலந்துரையாடல்*
- *2018.02.16 - பாதவலிக்கு ஹோமியோபதி சிகிச்சை*
- *2018.03.16 - இழுப்பு, மூச்சுவாங்கல் பற்றிய ஹோமியோபதி கலந்துரையாடல்.*
- *2018.04.20 - பீனிசத்திற்கு ஹோமியோபதி சிகிச்சை*
- *2018.06.01 - மூட்டு நோய் பற்றிய ஹோமியோபதி கலந்துரையாடல்.*
- *2018.07.04 - தோல்பட்டை வலிக்கு ஹோமியோபதி சிகிச்சை*
- *2018.08.01 - ஒஸ்ரியோ பொரசிஸ் பற்றிய ஹோமியோபதி கலந்துரையாடல்.*
- *2018.09.06 - கழுத்து மற்றும் இடுப்பு வலிக்கு ஹோமியோபதி சிகிச்சை*
- *2018.10.04 - மனச்சோர்வுக்கு ஹோமியோபதி சிகிச்சை*
- *2018.11.01 - சிறுநீரக பிரச்சினைகளுக்கு ஹோமியோபதி சிகிச்சை*
- *2018.12.06 - சுருள் சிரை நரம்பு பற்றிய ஹோமியோபதி கலந்துரையாடல்.*

02. ITN - Coffee Table

- *2018.02.12 - சிறுநீரகத்தில் கல் பிரச்சினைகளுக்கு ஹோமியோபதி சிகிச்சை*
- *2018.04.10 - பித்தப்பை கல் பிரச்சினைகளுக்கு ஹோமியோபதி சிகிச்சை*

03. தேசிய தொலைக்காட்சியில் - சங்ஹரிந்த நிகழ்ச்சி

- *2018.02.27 - ஹோமியோபதி மருத்துவ முறையை அறிமுகப்படுத்தல்*

04 Colombo TV – Colombo Doctor

- *2018.03.07 - ஒஸ்ரியோ ஆத்தரைட்டீஸ் சிகிச்சை*
- *2018.04.03 - இடுப்பு வலிக்கு ஹோமியோபதி சிகிச்சை*

05. சிரச டீவி – வாழ்க்கைக்கு இடங்கொடுங்கள் நிகழ்ச்சித்திட்டம்

- 2018.10.17 - ஹோமியோபதி மருத்துவ முறையை அறிமுகப்படுத்தல்

வானொலி நிகழ்ச்சிகள்

01. ITN வானொலி – நிழலுக்கு வாருங்கள் நிகழ்ச்சித்திட்டம்

- 2018.01.04 - காலில் ஆணியை சுகப்படுத்துவதற்கு ஹோமியோபதி சிகிச்சை
- 2018.01.11 - மேலாண்மை பக்கவாதம்
- 2018.01.18 - சிறுநீரக நோயாளிகளுக்கு ஹோமியோபதி சிகிச்சை
- 2018.01.25 - மூக்கில் இருந்து இரத்தம் வடிதல்
- 2018.02.01 - குதிக்கால் வலிக்கு ஹோமியோபதி சிகிச்சை
- 2018.02.08 - நீரழிவு நோயைச் சுகப்படுத்தும் ஹோமியோபதி சிகிச்சை.
- 2018.02.15 - பாத விறைப்பினைச் சுகப்படுத்தும் ஹோமியோபதி சிகிச்சை.
- 2018.02.22 - ஒவ்வாமைகளைச் சுகப்படுத்தும் ஹோமியோபதி சிகிச்சை.
- 2018.03.01 - வயிற்றுப்புண்ணைச் சுகப்படுத்தும் ஹோமியோபதி சிகிச்சை
- 2018.03.08 - வாய்வழி நோய்களுக்கு ஹோமியோபதி சிகிச்சை
- 2018.03.15 - தோல் நோய்களுக்கு ஹோமியோபதி சிகிச்சை
- 2018.03.22 - நெஞ்சுவலிக்கு ஹோமியோபதி சிகிச்சை
- 2018.03.29 - கல்லீரல் தொடர்பான நோய்களுக்கு ஹோமியோபதி சிகிச்சை
- 2018.04.05 - பொடுகு, தேரைத் தோல், வெண் குஸ்டம் என்பவற்றுக்கு ஹோமியோபதி சிகிச்சை
- 2018.04.12 - மன அழுத்தம் காரணமாக ஏற்படும் தலைவலிக்கு ஹோமியோபதி சிகிச்சை
- 2018.12.28 - வைரஸ் காய்ச்சல் நோயைச் சுகப்படுத்துவதற்கு ஹோமியோபதி சிகிச்சை

02. V fm – OPD வைத்தியரைச் சந்தித்தல்

- 2018.10.30 - ஹோமியோபதி சிகிச்சைகளை அறிமுகப்படுத்தல்
-

பத்திரிகைக் கட்டுரைகள்

01. இசிவர பத்திரிகை

- 2018. ஜனவரி இதழ் - விறைப்பினைச் சுகப்படுத்தும் ஹோமியோபதி சிகிச்சை
- 2018 பெப்பரவரி இதழ் - காலாணியைச் சுகப்படுத்துவதற்கு ஹோமியோபதி சிகிச்சை
- 2018 மார்ச் இதழ் - மூட்டு நோயை முற்றாகக் குணப்படுத்த ஹோமியோபதி சிகிச்சை
- 2018 ஏப்பிரல் இதழ் - முதுகு வலிக்கு ஹோமியோபதி சிகிச்சை

- 2018 மே இதழ் - நோய்களைச் சுகப்படுத்துவதற்கு விசேடமான ஹோமியோபதி சிகிச்சை
- 2018 ஜூன் இதழ் - விரல் மொழிப்பிரச்சினைகளைக் குணப்படுத்தும் ஹோமியோபதி சிகிச்சை
- 2018 ஜூலை இதழ் - சியாட்டிகா பாத வலியைக் குணப்படுத்தும் ஹோமியோபதி சிகிச்சை
- 2018 ஆகஸ்ட் இதழ் - தலைவலி, ஒற்றைத்தலைவலியைச் சுகப்படுத்தம் ஹோமியோபதி சிகிச்சை
- 2018 செப்டெம்பர் இதழ் - ஒஸ்ரியோ பொரோசிஸிஸைக் குணப்படுத்துவதற்கு ஹோமியோபதி சிகிச்சை
- 2018 ஒக்டோபர் இதழ் - கால் கை வலிப்புக்கு ஹோமியோபதி சிகிச்சை
- 2018 நவம்பர் இதழ் - ஹோமியோபதி சிகிச்சையூடாக தனாகவே சிறுநீர் வெளியாவதற்கு நிவாரணம்
- 2018 டிசம்பர் இதழ் - செலுயலடிஸ் சுகப்படுத்தும் ஹோமியோபதி சிகிச்சை


"ඔස්ටියෝ පොරොසිස්" වලට
හිත හබන
හෝමියෝපති
ප්‍රතිකාර

02. சிறிகத பத்திரிகை

- 2018.08.27 - ஹோமியோபதி சிகிச்சை முறைகளை அறிமுகப்படுத்தல்.

03. தருணி பத்திரிகை


- 2018.02.28 - கைகால் வளைவுகளை சரிப்படுத்தும் ஹோமியோபதி சிகிச்சை
- 2018.03.28 - விறைப்பினைச் சுகப்படுத்தும் ஹோமியோபதி சிகிச்சை
- 2018.05.30 - பாகின்சன் நோயைச் சுகப்படுத்தும் ஹோமியோபதி சிகிச்சை
- 2018.07.12 - மூட்டுவாதத்தைச் சுகப்படுத்தும் ஹோமியோபதி சிகிச்சை
- 2018.08.15 - முதுகுதண்டு வலிக்கு ஹோமியோபதி சிகிச்சை
- 2018.09.12 - ஒஸ்ரியோ பொரோசிஸ்சை சுகப்படுத்தும் ஹோமியோபதி சிகிச்சை
- 2018.10.24 - தலைவலியைச் சுகப்படுத்தும் ஹோமியோபதி சிகிச்சை
- 2018.11.28 - சயடிகா நோய்க்கு ஹோமியோபதி சிகிச்சை

04. *லக்பிம பத்திரிகை*

- *2018.04.29 - மூட்டுவாத நோய்க்கு ஹோமியோபதி சிகிச்சை*
- *2018.05.20 - கழுத்துவலிக்கு ஹோமியோபதி சிகிச்சை*
- *2018.06.17 - கைகால் விறைப்பினைச் சுகப்படுத்தும் ஹோமியோபதி சிகிச்சை*
- *2018.07.15 - மூட்டுவலியை சுகப்படுத்தும் ஹோமியோபதி சிகிச்சை*

05. *திவயின (திங்கள்) பத்திரிகை*

- *2018.06.04 - நோயைச் சுகப்படுத்தவதற்கு தனித்துவமான ஹோமியோபதி சிகிச்சை*
- *2018.07.09 - மூட்டுவலிகளில் இருந்து நிவாரணம் பெற ஹாமியோபதி சிகிச்சை*
- *2018.09.10 - தலைவலி, ஒற்றைத்தலைவலி என்பவற்றுக்கான ஹாமியோபதி சிகிச්சை*
- *2018.10.22 - பாகின்ஸன் நோயாளர்களுக்கு மீண்டும் வாழ்வைக் கொடுக்கும் ஹோமியோபதி சிகிச்சை*
- *2018.11.19 - விறைப்பினைச் சுகப்படுத்தும் ஹோமியோபதி சிகிச்சை*
- *2018.12.10 - எலும்புகள் தேய்வடைவதை நிறுத்துவதற்கான ஹோமியோபதி சிகிச்சை*



දිවයින 27

2018 ජූලි මස 22 වැනිදා ඉරිදා

හෝමියෝපති වෙදකමින් පාකින්සන් සුව කරන හැටි [1]

HISTORY DRUGGS

Vegetable, Animal and Mineral

වෛද්‍ය අනුෂා හේමකුමාර

- *2018.08.12 - ஹோமியோபதி சிகிச்சை மூலம் பாகின்ஸன் நோயைக் குணப்படுத்தும் முறை.*
- *2018.08.19 - ஹோமியோபதி சிகிச்சை மூலம் பாகின்ஸன் நோயைக் குணப்படுத்தம் முறை.*
- *2018.08.26 - ஹோமியோபதி சிகிச்சை மூலம் நோய்களைச் சுகப்படுத்தும் முறை.*
- *2018.09.09 - ஹோமியோபதி சிகிச்சை மூலம் நோய்களைச் சுகப்படுத்தும் முறை.*
- *2018.09.16 - பாகின்ஸன் நோயைக் குணப்படுத்தும் ஹோமியோபதி சிகிச்சை.*
- *2018.09.23 - கைகால் வலி நோயைக் குணப்படுத்தும் ஹோமியோபதி சிகிச்சை.*
- *2018.10.07 - கழுத்துவலிக்கு ஹோமியோபதி சிகிச்சை.*
- *2018.10.14 - ஹோமியோபதி சிகிச்சை மூலம் பாகின்ஸன் நோயைக் குணப்படுத்தும் முறை.*
- *2018.10.28 - பாகின்ஸன் நோயைக ஹோமியோபதி சிகிச்சை.*
- *2018.10.04 - பாத வளைவை சரியாக்கும் ஹோமியோபதி சிகிச்சை.*

04. அரச ஹோமியோபதி புதிய சிகிச்சை நிலையங்களை ஆரம்பித்தல்

இவ்வருடம், பொதுமக்கள் சுகாதார சேவையை நாட்டினுள் மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்துடன் புதிய சிகிச்சை நிலையங்கள் 07ஐ ஆரம்பிப்பதற்கு அவசியமான முதற்பணிகளை மேற்கொள்வதற்காக பாரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய சிகிச்சை நிலையங்களை ஆரம்பிப்பதற்கு, பதவிகளுக்கான அனுமதி பெறப்பட்டிருந்த போதிலும், இவற்றினை ஆரம்பிப்பதற்கு அரசுக்கு சொந்தமான இடங்கள் மற்றும் கட்டிடங்கள் இல்லாமை தடையாக காணப்பட்டது.

4.1 ஹோமியோபதி புதிய இடங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் கட்டிடங்களைப் புதுப்பித்தல்

